எதிரில் சிறிது தூரத்திலே ஒரு புலி பாய்ந்து வந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு அது மன்னரை நோக்கிப் பாய்ந்து வருவது போல் இருந்தது. மன்னர் கண்ணிமைக்காமல் சிறிதும் மனங்கலங்காமல் அதை உற்று நோக்கினார்.

அந்தப் புலியின் முதுகிலே ஒரு மனிதன் அமர்ந்திருந்தான். அவன் கையிலே ஒரு கோல் வைத்திருந்தான். அந்தக் கோலிலிருந்துதான் மின்னல் ஒளி பாய்ந்து வந்து கொண்டிருந்தது.

அரசர் எதிரில் வந்ததும் புலி நின்றது. புலியின் முதுகில் இருந்த அந்த மனிதன் பேசத் தொடங்கினான்.

அவன் முகம் பார்ப்பதற்கு ஒரே அவலட்சணமாயிருந்தது. குழிவிழுந்த கண்களின் பார்வை மிகக் கொடூரமாயிருந்தது. அவன் மூக்கும் மீசையும் அவன் உருவத்தை மேலும் விகாரமாகத்தான் எடுத்துக் காட்டின.





“வடநாட்டிலே உச்சயினிப் பட்டணம் என்று ஒரு பட்டணம் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே ஒரு பாலைவனம் இருக்கிறது. அந்தப் பாலைவனத்திலே நெருப்புப் பொறிகள் பறக்கும். அந்த நெருப்புப் பொறிகளைப் பந்தாடி விளையாடிக் கொண்டு பேய்க் கூட்டங்கள் திரியும். அந்தப் பேய்க் கூட்டங்களையெல்லாம் அடக்கி வைத்திருக்கிறான் இந்த மந்திரவாதி. அதனால் இவன்மிக வல்லமையோடிருக்கிறான்.

“பாலைவனத்தின் பக்கத்திலே ஒரு கல்மலையிருக்கிறது. அந்த மலையின் அடிவாரத்தில் ஒரு பெரிய குகையிருக்கிறது. அந்தக் குகையில் தான் உருத்திரகோபன் என்ற இந்த மந்திரவாதி இருக்கிறான்.

“அவன் மேலும் வல்லமை பெறுவதற்காக அரக்கர்களின் மூல நாயகியான மூளியம்மனை நோக்கித் தவமிருக்கிறான். மூளியம்மனுக்குப் பலி கொடுக்கவே தங்கள் மகளைக் கேட்க வந்திருக்கிறான்.

“மன்னர் பிரானே, நீங்கள் மனமொப்பி உங்கள் மகளைக் கொடுத்தால் தான் மூளியம்மன் அந்தப்பலியை ஏற்றுக்கொள்வாள்.

நீங்கள் ஒரு முடிவுக்கு வரும் வரை, இளவரசியை அரண்மனையில் ஓர் அறையில் படுக்க வைத்திருங்கள். அந்த அரண்மனையில் இளவரசியிடம் அன்புள்ள ஒரு பெண்மணியைக் காவல் இருக்கும்படி செய்யுங்கள். பிறகு மற்றவற்றைப் பார்த்துக் கொள்ளலாம்: என்று கூறினார் குருக்கள்.

குருக்களிடம் விடை பெற்றுக்கொண்டு அரசர் பிரான் தம் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

இளவரசி செந்தாமரையை ஓர் அழகிய அறையில் படுக்க வைத்தார்கள். பட்டு மெத்தை விரித்த கட்டில் ஒன்றிலே துவண்டு கிடக்கும் பூங்கொடி போல இளவரசி கிடந்தாள். இமை மூடி அவள் தூங்கும் போது. கண் திறக்காத அழகிய பளிங்குச் சிலையொன்று சாய்ந்து கிடப்பது போலிருந்தது. அந்த அறையில், அரச பக்தியும், இளவரசியிடம் மிகுந்த அன்பும் கொண்ட தாதி ஒருத்தி காவலாக அமர்த்தப்பட்டாள். அவள் அல்லும் பகலும் அந்த அறையை விட்டு அகலாது காத்துக் கொண்டிருந்தாள்.



மணிவண்ணன் உருவத்தை அந்தப் புலியால் பார்க்க முடியவில்லை. ஆனால் அது மோப்பத்தினால் மனித வாசம் அடிப்பதைக் கண்டு கொண்டது. உடனே பேரோலமிட்டு உறுமியது.

அந்தப் பயங்கரமான புலியின் உருவத்தை நேரில் கண்டு, அதன் உறுமல் ஓலத்தையும் காதால் கேட்டவர்கள் அந்தப் பயத்தின் அதிர்ச்சியிலேயே உயிரை விட்டிருப்பார்கள். மணிவண்ணன் சிறிது கூட மனங்கலங்கவில்லை. மந்திரவாதியைக் கொன்று இளவரசியைத் துயில் எழுப்ப வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் தான் அவன் நெஞ்சில் நிறைந்திருந்தது. வேறு எவ்விதமான நினைப்புகளுக்கோ உணர்ச்சிகளுக்கோ அவன் உள்ளத்தில் இடம் சிறிதுகூட இல்லை. அவன் சிறிதும் அச்சங் கொள்ளாமல் உருவிய வாளுடன் குகையை நெருங்கினான்.

அவன் நெருங்க நெருங்கப் புலியின் உறுமல் ஓலம் அதிகமாகியது. குகையின் உள்ளேயிருந்த மந்திரவாதி ஏதோ கெடுதல் வருகிறதென்று தெரிந்து கொண்டான்.



பெருஞ் சக்தி வாய்ந்த அந்த மந்திரவாதி, ஒரு சாதாரண மாணவன் கையால் உயிரிழந்தான்.



மந்திரவாதியின் தலையைத் துண்டித்த மணிவண்ணன் அதைத் தனியே ஒரு துண்டில் சுற்றி மூடிக் கட்டி எடுத்துக் கொண்டான். குகையில் பாறாங்கற்களை உருட்டி வந்து வைத்துக் கெட்டித்து அதை அடைத்தான். பிறகு தன் பஞ்சகல்யாணி இருந்த இடத்திற்கு வந்தான்.

குதிரையை அவிழ்த்து அதன் முதுகில் ஏறி உட்கார்ந்தவுடன் அது நேராகக் காற்றில் பறந்து மேகங்களை ஊடுருவிக் கடந்து, வன தேவதையின் மணிமண்டபத்தில் வந்திறங்கியது.

மணிமண்டபம் முன்பிருந்ததைவிட அழகாக விளங்கியது. அதைச் சுற்றிலும் காட்டுமலர்களால் ஆன தோரணங்களும் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. ஆண் தெய்வங்களும், பெண்தெய்வங்களும்